**முதன்மை சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்**

**அசல் வழக்கு எண்.121/2022**

2025ம் ஆண்டு **அக்டோபர் மாதம் 29–ம் தேதி** வாதி தரப்பு சாட்சி **வா.சா.1–ன்** வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி திரு.எம்.ராமச்சந்திரன், பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கலைவாணி | வா.சா | 1 |
| த/க/பெயர் | கந்தசாமி | தொழில் | பாத்திர கடை வேலை |
| கிராமம் | ஊஞ்சபாளையம் | வட்டம் | திருச்செங்கோடு |
| வயது | 38 | நாள் | 29.10.2025 |

**முதல் விசாரணை:–**

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். நான் இந்த வழக்கில் என்னுடைய நிரூபண பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் தெரியும், அதிலுள்ள கையெழுத்து என்னுடையதாகும். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்று, அதில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை முறையே கீழ்கண்டவாறு குறியீடு செய்து, வழக்குரையில் கோரியுள்ளவாறு பரிகாரம் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

1) 07.03.2022 தேதியிட்ட ஆண்டிபாளையம் கிராமம் பட்டா எண்.58–ற்கான கணினி பட்டா **வா.த.சா.ஆ.1 ஆகவும்,**

2) 10.12.2019 தேதியிட்ட வஜ்ரவேல் என்பவரது வாரிசு சான்று கணினி நகல் **வா.த.சா.ஆ. 2 ஆகவும்,**

3) 19.09.2012 தேதியிட்ட வாதியின் பிறப்பு சான்று நகல் **வா.த.சா.ஆ.3 ஆகவும்,**

4) 11.03.2022 தேதியிட்ட வில்லங்கசான்று கணினி நகல் **வா.த.சா.ஆ.4 ஆகவும்,**

5) 16.07.2007 தேதியிட்ட 9 முதல் 16 பிரதிவாதிகளுக்கிடையே ஏற்படுத்திக்கொண்ட பாகப்பிரிவினை பத்திரம் சான்றிட்ட நகல் **வா.த.சா.ஆ.5 ஆகவும்,**

6) 28.02.2007 தேதியிட்ட 17–ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரய ஆவணம் சான்றிட்ட நகல் **வா.த.சா.ஆ.6 ஆகவும்,**

7) தாவா சொத்தின் வழிகாட்டி மதிப்பீடு கணினி நகல் **வா.த.சா.ஆ.7 ஆகவும்,** ஆகியவற்றை குறியீடு செய்து கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**7, 8, 10, 13 முதல் 15 மற்றும் 17 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

Sd/-M.Ramachandran

Taken down before / by me in the open court and read over / interpreted to the witness and acknolwedged by him / her to be correct.

Sd/.M.Ramachandran,
Principal Subordinate Judge, Tiruchengode.

Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, CrPC)
IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUCHENGODE

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | | | 120/2025 |
| Depositions of Witness for | | Prosecution<br>Defence<br>Court | அ.சா.2 |
| Name | : | ராஜ்குமார் | |

| | | |
|---|---|---|
| Father's/Husband Name | : | அப்புகுட்டன் |
| Village | : | குமாரபாளையம் |
| Taluk | : | குமாரபாளையம் |
| Calling | : | டெக்ஸ்டைல்ஸ் |
| Age | : | 38 |
| Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 24-10-2025 | | |

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் குமாரபாளையத்தில் வசித்து டெக்ஸ்டைல்ஸ் தொழில் செய்துவருகிறேன். அ.சா.1 எனது அண்ணன். கடந்த 28.06.2014 தேதியன்று நானும், எனது அம்மாவும், அண்ணனும் கேரளாவிற்கு ஒரு விஷேசத்திற்கு போனோம். போவதற்கு முன்பாக வீட்டை பூட்டிவிட்டு வீட்டிற்கு முன்பாக எனக்கு சொந்தமான டிஎன் 34 டி 9844 என்ற பதிவு எண் கொண்ட பல்சர் வாகனத்தை வீட்டின் முன்பாக நிறுத்திவிட்டு சென்றோம். நானும், என் அண்ணனும் 29.06.2014 தேதி தங்கினோம். அம்மா மட்டும் வீட்டிற்கு வந்துவிட்டார். அம்மா வீட்டிற்கு வந்து பார்த்தபோது வீடு பூட்டியிருந்தது. வீட்டிற்கு முன்பாக எனது வண்டியும் நின்றுகொண்டிருந்தது. அம்மா தனியாக தங்கவேண்டுமென்பதால் அருகிலுள்ள சாந்தா என்பவரது வீட்டில் இரவில் தங்கிவிட்டு 30.06.2014 தேதி காலை 6 மணிக்கு அம்மா வீட்டிற்கு வந்து பார்த்தபோது வீட்டின் கேட் உடைக்கப்பட்டிருந்தது. வீட்டின் முன்பாக இருந்த வண்டியும் காணாமல் போயிருந்தது. வீட்டின் கதவு உடைக்கப்பட்டிருந்தது. அம்மா உள்ளே போய் பார்த்தபோது வீடு எரிந்துகொண்டிருந்தது. உடனே என் அம்மா எங்களுக்கு போன் செய்து வீடு எரிந்துகொண்டிருந்த விவரத்தை கூறினார். பின்னர் என் அண்ணன் குமாரபாளையம் காவல் நிலையம் சென்று நடந்த சம்பவம் குறித்து புகார் கொடுத்தார்.



வழக்கு சம்மந்தமாக போலீஸார் விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை இல்லை.**

Sd/-M.Ramachandran

Taken down before / by me in the open court

and read over / interpreted to the witness and acknolwedged by him / her to be correct.

Sd/.M.Ramachandran,

Principal Subordinate Judge, Tiruchengode.

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, CrPC)

IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUCHENGODE

| | | |
|---|---|---|
| Sessions Case No. | | 120/2025 |
| Depositions of Witness for | Prosecution<br>Defence<br>Court | அ.சா.3 |
| Name | : | மணி |
| Father's/Husband Name | : | அப்புகுட்டன் |
| Village | : | குமாரபாளையம் |
| Taluk | : | குமாரபாளையம் |
| Calling | : | வீட்டுகுடித்தனம் |
| Age | : | 60 |
| Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 24-10-2025 | | |

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் குமாரபாளையத்தில் வசித்துவருகிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 எனது மகன்கள். கடந்த 28.06.2014 தேதி ஒரு விஷேசத்திற்காக கேரளா செல்லும்போது வீட்டை பூட்டிவிட்டு, வீட்டிற்கு முன்பாக எனது மகன் ராஜ்குமாருக்கு சொந்தமான பல்சர் வாகனத்தை நிறுத்திவிட்டு போனோம். நான் மறுநாள் 29.06.2014 தேதியன்று கேரளாவிலிருந்து இரவு ஊருக்கு திரும்பி வந்துவிட்டேன். வீட்டை பார்த்தபோது வீடு பூட்டப்பட்டிருந்தது. வீட்டிற்கு முன்பாக இருசக்கர வாகனம் நின்றுகொண்டிருந்தது. வீட்டில் தனியாக படுக்க பயமாக இருந்ததால், உறவினர் வீட்டிற்கு சென்று இரவு தங்கிவிட்டு, மறுநாள் காலை 6, 6.30 மணிவாக்கில் வீட்டிற்கு வந்துபார்த்தபோது வீட்டின் கேட் மற்றும் கதவு திறந்திருந்தது. வீட்டின் முன்பாக இருந்த வண்டி காணாமல் போயிருந்தது. வீட்டினுள் சென்றுபார்த்தபோது பீரோவிலிருந்த துணிமணி எரிந்துகொண்டிருந்தது. பின்னர் எனது மகன்களுக்கு தகவல் கொடுத்து அவர்கள் வந்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள். வீட்டில் எரிந்துபோன துணிகளை பார்த்தால் அடையாளம் காட்ட முடியுமா என்றால் காட்டமுடியும். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பாதி எரிந்தும், எரியாததுமான துணி மற்றும் எரிந்துபோன



சாம்பலாகும் அது **சா.பொ.2 மற்றும் சா.பொ.3** ஆகும். வழக்கு சம்மந்தமாக போலீஸார்

விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை இல்லை.**

Sd/-M.Ramachandran

Taken down before / by me in the open court and read over / interpreted to the witness and acknolwedged by him / her to be correct.
Sd/.M.Ramachandran,
Principal Subordinate Judge, Tiruchengode.

**<u>முதன்மை சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்</u>.**

2025 ம் ஆண்டு **அக்டோபர் மாதம் 14–ம் தேதி** மனுதாரர் தரப்பு சாட்சி **ம.சா.3–ன்** வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி எம்.ராமச்சந்திரன்,பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

**IP.No.14/2020**

**ம.சா:–3 (சரவணன்)**

**குறுக்கு விசாரணை (2ம் எதிர்மனுதாரர் தரப்பில்):–**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் பிஏ வரலாறு படித்துள்ளேன். இந்த மனுவானது யார் யார் பெயரில் தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். ராஜ்குமார், நவீன் பெயரில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். நவீனுக்கு எதிராக மட்டும் தான் தாக்கல் செய்துள்ளார். நான் மனுதாரர் ராஜ்குமாரிடம் வேலைபார்த்துவருகிறேன் என்றால் சரிதான். எத்தனை வருடமாக வேலைபார்த்து வருகிறேன் என்றால் 15 வருடமாக வேலை பார்த்துவருகிறேன். மனுதாரரிடம் 15

வருடமாக வேலை பார்த்துவருவதால் மனுதாரரின் நண்பர்கள் யார் யார் என்ற விவரம் எனக்கு தெரியுமென்றால் சரிதான். மனுதாரின் நண்பர் செந்தில்ராஜா என்பவர் ராமஜெயம் டிரான்ஸ்போர்ட்டை நடத்திவருகிறார் என்றும், அவரிடம் வேலை பார்க்கும் பூவிழி ராஜா என்பரை தெரியுமா என்றால் தெரியும். அவர் அங்கு மேலாளராக வேலைபார்த்துவருகிறார். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எல்லாம் யார் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் வழக்கறிஞர் சொல்லி தயார் செய்யப்பட்டுள்ளது. என்னுடைய முதலாளி ராஜ்குமார் வழக்கறிஞரிடம் சொல்லி வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் 1ம் எதிர்மனுதாரருக்கு எந்த இடத்தில் வைத்து மனுதாரர் கடன் கொடுத்தார் என்ற விவரம் சொல்லப்படவில்லையென்றால் சரிதான். முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். படித்துபார்த்துதான் கையெழுத்து செய்தேன். நான் எந்த வருடம் கல்லூரி படிப்பை முடித்தேன் என்றால் 1995ம் வருடம் கல்லூரி படிப்பை முடித்தேன். அப்போதிலிருந்து ஆங்கிலத்தில் கையொப்பமிடுவேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்ன ஆவணம் என்று தெரியுமா என்றால் தெரியும். அது பாண்டு ஆகும். நவீன்



ராஜ்குமாருக்கு எழுதிக்கொடுத்த ஆவணமாகும். மேற்படி பாண்டில் எழுதியது என்ற இடத்தில் என்னுடைய கையொப்பம் இல்லையென்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் எழுதியது என்ற இடத்தில் என்னுடைய கையெழுத்து இல்லாததால் மேற்படி ஆவணமானது என்னால் எழுதப்பட்ட ஆவணம் இல்லையென்றால் சரியல்ல. நான் தான் எழுதினேன். ம.சா.ஆ.1 கடனுறுதி சீட்டு ஆவணமானது ஒரு முழுமைபெறாத ஆவணம் என்றும், அதனடிப்படையில் எந்தவிதமான பரிகாரத்தையும் நீதிமன்றத்தின் மூலம் பெறமுடியாது என்றால் சரியல்ல. நான் மனுதாரரிடம் வேலை பார்த்துவருவதால் மனுதாரருக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.1 கடனுறுதி சீட்டானது வேறு ஒரு நபரால் எழுதப்பட்டுள்ளது என்றும், எழுதியது என்ற இடத்தில் என்னிடம் கையெழுத்து வாங்கிக்கொள்ளலாம் என்று எனது முகவரியை குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. 10.09.2019 தேதியில் 1ம் எதிர்மனுதாரர் மனுதாரரிடமிருந்து ரூ.4 லட்சம் கடன் பெற்றுக்கொண்டு அதற்கு

ஆதரவாக எழுதிக்கொடுக்கப்பட்ட ஆவணம் இல்லையென்றும், ம.சா.ஆ.1 ஆவணமானது ஒரு முழுமைபெறாத ஆவணம் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Sd/-M.Ramachandran

Taken down before / by me in the open court and read over / interpreted to the witness and acknolwedged by him / her to be correct.

Sd/.M.Ramachandran,

Principal Subordinate Judge, Tiruchengode.